<u>**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**</u>

**OS.No.102/2022** நாள்.13.03.2025

இந்த நீதிமன்ற 2ம் நிலை உதவியாளர் திருமதி.கலைவாணி, என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ......... வா.சா.1 ................. சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு 13.03.2025 நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பழனி |
| த/பெ | : | சம்பத் |
| வயது | : | 58/2025 |
| தொழில் | : | தனியார் கம்பெனி |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | வள்ளுவம்பாக்கம் |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். பிரதிவாதி என்னிடம் 05.01.2020 அன்று கடனாக பெற்று கொண்டு தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்தார் அதன் அசல் **வா.த.சா.ஆ.1** ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.